***கவனிக்க*** *.– 2014.08.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* III *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1878 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1878ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 104 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.***–பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் ) சட்டமூலம் ஆகியன 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 5ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## கனேகம ஸ்ரீ இந்ரசார தர்மாயதன சங்ரக்ஸன சபையை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

வீ.கே. இந்திக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் கீழ் கனேகம ஸ்ரீ இந்ரசார தர்மாயதன சங்ரக்ஸன சபையை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சபையைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) பௌத்தமத புராதன சம்பிரதாயத்துக்கு இணங்க பிக்கு மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான நிலையமொன்றை ஆரம்பித்தலும் அதனைப் பேணுதலும்;

(2) பௌத்த தர்மம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும் அதற்கான நிலையங்ளை ஆரம்பித்து நிர்வகித்தலும், பராமரித்தலும்;

(3) கனேகம ஸ்ரீ இந்துசார அறநெறி நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை மேம்படுத்தலும் உறுப்பினர்களினதும் பொது மக்களினதும் கலாசார மேம்பாட்டுக்கான ஏற்பாடுகளை செய்தலும்;

பிறவும்.

வீ.கே. இந்திக,
பாராளுமன்ற உறுப்பினர்,
அம்பாந்தோட்டை மாவட்டம்.

8-956

---

## சந்தியா சிரிவர்தன மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சுதர்ஷனி பர்னாந்து புள்ளே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'சந்தியா சிரிவர்தன மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சபையைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) குறைந்த வருமானமுள்ள மற்றும் தொழிலற்றவர்களினுள் உள்ள ஆற்றல் மற்றும் திறன் அடிப்படையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உதவுதல் மற்றும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுப்பதனூடாக அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்து புவி அபிவிருத்தி மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு உதவுதல்;

(2) உள, உடல் நலனோம்பில் தரமான மாற்றமொன்றை ஏற்படுத்தக்கூடியவிதமான படைப்பாற்றல் கலைகளைக் கற்பதற்கு சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதினூடாக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு உதவியாயிருத்தல்;

(3) குறைந்த வருமானமுள்ள மற்றும் தேவைகளுள்ளோருக்கு இலவச சிகிச்சைப் பாசறைகளில் மருத்துவ சிகிச்சை செய்தல் மற்றும் இலவசமாக மருந்து வகைகளை பகிர்ந்தளித்தல் மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு உதவுதல் மற்றும்;

பிறவும்.

சுதர்ஷனி பர்னாந்து புள்ளே,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

8-1018

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.